தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 16 மடல் 4 ஏப்ரல் – 2016 ₹1.00

## தேசிய அளவிலான பல்கலைக்கழகங்களில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தேசிய அளவில் 36ஆவது இடம் மற்றும் மாநில அளவில் 3ஆவது இடம்



தேசிய அளவிலான பல்கலைக்கழகங்களுக்கான தேசியத் தரவரிசை ஆய்வு, மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வு மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால், கல்வி மற்றும் கல்வி கற்றலுக்கான சூழல்கள், ஆராய்ச்சி, ஆலோசனை மற்றும் கூட்டிணைவு மேம்பாட்டு முயற்சிகள், தேர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புக்கான சூழ்நிலைகள், பரவலாக்கம் மற்றும் ஒருங்கிணைந்த சேவைகள், தேசிய நிறுவனங்களுக்கான தரவரிசைக் கோட்பாட்டின் எதிர்பார்ப்புகள் போன்ற ஐந்து வகையான உயர்கல்விக் கோட்பாடுகளை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் 1438 பொறியியல் கல்லூரிகள், 609 மேலாண்மைக் கல்வி நிறுவனங்கள், 454 மருந்தியல் கல்வி நிறுவனங்கள் மற்றும் 233 பல்கலைக்கழகங்கள் ஆக மொத்தம் 2734 கல்வி நிறுவனங்கள் பங்கு பெற்றன. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும் தேசியத் தரவரிசை ஆய்வுக்கு வேண்டிய தகவல்களை அளித்து, தேசியத் தரவரிசை ஆய்வில் பங்கேற்றது. இந்த ஆய்வின் முடிவுகள் மாண்புமிகு மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சர் திருமதி ஸ்மிருதி ஜுபைன் இரானி அவர்களால் 04.04.2016அன்று புதுதில்லி, விஞ்ஞான்பவனில் வெளியிடப்பட்டது. பல்கலைக்கழகங்களுக்கான மதிப்பீட்டில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தேசிய அளவில் 36ஆவது இடத்தையும் மாநில அளவில் 3ஆவது இடத்தையும் பெற்று முதல் 50 பல்கலைக்கழகப் பட்டியலில் இடம்பிடித்துப் பெருமை சேர்த்துள்ளது. இதுமட்டுமன்றி இப்பல்கலைக்கழகம் கல்வி மற்றும் கல்வி கற்றலுக்கான சூழல்களை வழங்கிடும் கோட்பாட்டில் தேசிய அளவில் 5ஆவது இடத்தையும் மாநில அளவில் முதல் இடத்தையும் பெற்றுள்ளது. விரிவாக்கப் பணி மற்றும் உற்பத்தித்திறனில் தமிழ் நாடு அளவில் பல்கலைக்கழகம் முறையே நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களைப் பெற்றிருக்கிறது.

மேலும், தேசிய வேளாண் ஆராய்ச்சிப் பணிகளை உள்ளடக்கிய 63 மாநில அளவிலான வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளப் பல்கலைக்கழகங்களில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளது. குறிப்பாக இந்தியாவில் உள்ள மொத்தம் 12 கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகங்களில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு(UGC)வின் வெவ்வேறு வகையான தர மதிப்பீட்டில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் பெற்றிருக்கும் உயர்ந்த இடம், கால்நடை மருத்துவ அறிவியலில் வழங்கப்படும் தரமான கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்தின் பிரதிபலிப்பாகத் திகழ்கிறது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் எதிர்வரும் காலங்களின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தேவையான அனைத்து உள்கட்டமைப்புகள் மற்றும் வழிகாட்டுதல்களையும் உருவாக்கியுள்ளதாகப் இச்செய்தியின் வாயிலாகத் தெரிவித்தார்கள். மேலும், வரும் ஆண்டுகளில் முதல் 25 பல்கலைக்கழகங்கள் பட்டியலில் இடம்பெறுவதற்கான செயல்பாடுகளையும் கடின உழைப்பையும் பல்கலைக்கழகம் செய்யும் என்றும் குறிப்பிட்டார்கள்.

## இருபத்தைந்தாவது ஆராய்ச்சிக் குழுக் கூட்டம்




பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநரகத்தால் பல்கலைக்கழகத்தின் 25ஆவது ஆராய்ச்சிக் குழுக் கூட்டம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 04.03.2016அன்று நடத்தப்பட்டது. கூட்டத்திற்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் தலைமையேற்றார். ஓய்வுபெற்ற ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ஏ. மகாலிங்க நயினார், தமிழக அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறையின் கூடுதல் இயக்குநர் டாக்டர் ஆர். சங்கர சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புவல்லுநர்களாகக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்–செயலர் மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ம. பாபு அவர்கள், முந்தைய ஆராய்ச்சிக் குழுக் கூட்டப் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களைத் தெரிவித்ததோடு, புதிய ஆராய்ச்சித் திட்டங்களைப் பட்டியலிட்டார். மேலும், 2015இல் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பற்றியும் விளக்கிக்கூறப்பட்டது. பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும் 73 அரசுத் திட்டங்களை 2016–17ஆம் ஆண்டிலும் தொடர இந்த ஆராய்ச்சிக் கூட்டத்தின் ஒப்புதல் வேண்டப்பட்டது. 2015இல் முடிவுற்ற 19 திட்டங்களின் ஆராய்ச்சி முடிவுகளைத் திட்டங்களின் முதன்மை ஆராய்ச்சியாளர்கள் விளக்கினர். அரசின் நியமன உறுப்பினர்களான சிறப்பு வல்லுனர்கள் கோயம்புத்தூர் டாக்டர் எஸ். ருக்மாங்கதன், சென்னை டாக்டர் வி. வேலன், சென்னை திரு. ஜீவன்தாஸ் ராய், முன்னோடிக் கால்நடைப் பண்ணையாளர்கள் ஈரோடு திரு. கே.ஏ. சத்தியமூர்த்தி, சேலம் திரு. எஸ். ஜெயராமன், நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், வேளாண் அறிவியல் நிலையங்கள், உழவர் பயிற்சி மையங்கள் மற்றும் பண்ணைகளின் தலைவர்கள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர். பல்கலைக்கழகத்தின் எதிர்கால ஆராய்ச்சித் திட்டங்களைச் செம்மைப்படுத்தப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் வழங்கிய ஆலோசனைகளுடன் ஆராய்ச்சிக் குழுக் கூட்டம் முடிவுற்றது.

## இருபத்தேழாவது விரிவாக்கக் கல்விக் குழுக் கூட்டம்



இருபத்தேழாவது விரிவாக்கக் கல்விக் குழுக் கூட்டம் 22.03.2016அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் “ஒருங்கிணைந்த பண்ணையம்” மற்றும் “கால்நடைகளுக்கு மாற்றுத் தீவனம் மற்றும் வளங்கள்” குறித்த பண்ணை வானொலிப் புத்தகங்கள் மற்றும் பசுந்தீவனம் ஒரு பார்வை மற்றும் வெண்பன்றி வளர்ப்பு வீடியோ டிவிடியை வெளியிட்டுக் கருத்துரை வழங்கினார். விரிவாக்கக் கல்வி இயக்குநர் மற்றும் விரிவாக்கக் கல்விக் குழுவின் உறுப்பினர் செயலர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் 26ஆவது விரிவாக்கக் கல்விக் குழுக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள் மற்றும் 2015ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட விரிவாக்கப் பணிகள் குறித்து அறிக்கை அளித்தார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கூடுதல் தலைமை இயக்குநர் முனைவர் வி.பி. சாகல், ஷிமோகா கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்வடை விரிவாக்கக் கல்வித் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கே.சி. வீரண்ணா ஆகிய நியமனம் செய்யப்பட்ட புறநிலை விரிவாக்க வல்லுநர்கள், நியமனம் செய்யப்பட்ட பண்ணையாளர்கள் மற்றும் விரிவாக்கக் கல்விக் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவித்தனர். பல்கலைக்கழக அதிகாரிகள், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், வேளாண் அறிவியல் நிலையங்கள் மற்றும் உழவர் பயிற்சி மையங்கள், ஆராய்ச்சி நிலையங்களின் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## கல்லூரி மற்றும் விளையாட்டு நாள் விழா




சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கல்லூரி நாள் விழா 18.03.2016அன்று கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றினார். சென்னை, மண்டலக் கடவுச்சீட்டு அலுவலர் திரு. கே. பாலமுருகன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, கல்லூரி ஆண்டு மலர் வெளியிட்டார். மேலும், சிறந்த ஆசிரியர்கள் மற்றும் கல்வியில் சிறப்பிடம் பெற்ற மாணவர்கள், கலைநிகழ்ச்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் கல்லூரி ஆண்டறிக்கை–2014–2015 அளித்தார். சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் ஆர். ஜெயபிரகாஷ், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரி மலரின் ஆசிரியர் முனைவர் எஸ்.எம்.கே. கார்த்திகேயன் அவர்கள் கல்லூரி மலர் குறித்து எடுத்துரைத்தார். கல்லூரியின் மாணவர் சங்கத் துணைத் தலைவர் முனைவர் எஸ்.என். சிவசெல்வம் அவர்கள் கலைநிகழ்ச்சிகள் குறித்துப் பேசினார். விளையாட்டுப் போட்டிச் செயலாளர் முனைவர் ஆர். ஸ்ரீதர் அவர்கள் விளையாட்டு–2014–15அறிக்கை அளித்தார். முன்னதாக, இறுதியாண்டு மாணவர் செல்வன் வி. பிரவீன் வரவேற்புரை ஆற்றினார். இறுதியாக, இறுதியாண்டு மாணவர் செல்வன் ஆர். விக்னேஷ் நன்றியுரை ஆற்றினார். அக்னி’15–கலைநிகழ்ச்சிகளின் தொகுப்பு, பார்வையாளர்களுக்குத் திரையிடப்பட்டன.

## விடுதி நாள் விழா மற்றும் முத்தமிழ் விழா



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் விடுதி நாள் விழா மற்றும் முத்தமிழ் விழா “ஊருணி’16” 19.03.2016அன்று கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் பி. வணங்காமுடி அவர்கள் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலைமகள் கழகப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கி, மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் உரையாற்றினார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கலைமகள் கழகத்தின் ‘அந்திமழை–2016’ இதழை வெளியிட்டு, தமது சிறப்புரையில் விடுதி வாழ்வு பற்றிய நினைவுகளைப் பகிர்ந்துகொண்டார். கல்லூரியின் முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் துவக்கவுரை ஆற்றினார். கல்லூரியின் விடுதிக் காப்பாளர் முனைவர் டி.ஏ. கண்ணன் அவர்கள் விடுதி அறிக்கை–2015 அளித்தார். கலைமகள் கழகத்தின் மாணவர் செயலாளர் செல்வன் விக்னேஷ் கலைமகள் கழகம் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். இறுதியாண்டு மாணவர் மற்றும் விடுதி மாணவர்களின் பிரதிநிதி செல்வன் முனி வெங்கட் கிருஷ்ணா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இறுதியாண்டு மாணவி செல்வி டி. தமிழினி நன்றியுரை ஆற்றினார்.

## டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் குடிமைப் பணி நாடுவோர் சங்கம் – துவக்க விழா



டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் குடிமைப் பணி நாடுவோர் சங்கம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 19.03.2016அன்று துவக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் பி. வணங்காமுடி, பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர், பேராசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

## கல்லூரி முத்திரை வெளியீடு

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கான புதிய முத்திரைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதற்காகக் கல்லூரியின் ராமையன்பட்டி



வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 07.03.2016அன்று கல்லூரியின் புதிய முத்திரையை வெளியிட்டார். கல்லூரி முதல்வர் முனைவர் எம். திருநாவுக்கரவு, பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

## துணைவேந்தர் ஆய்வு

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் அனைத்துத் துறைகளின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் 07.03.2016 மற்றும் 08.03.2016ஆம் தேதிகளில் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் துறைகளின் செயல்பாடுகளை ஆய்வுசெய்து, குறிக்கோள்களை எட்டுவதற்குச் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கான கருத்துரைகள் வழங்கினார். இவ்வாய்வின்போது கல்லூரி முதல்வர் முனைவர் எம். திருநாவுக்கரசு அவர்கள் உடனிருந்தார்.

## அந்தமானில் கால்நடை மருத்துவத்தில் ஊடுகதிரியக்கம் மற்றும் கதழ் ஒலி குறித்த பயிற்சி




அந்தமான் நிகோபார் தீவுகளின் கால்நடைப் பராமரிப்பு மற்றும்மருத்துவச்சேவைகள்துறையும்கால்நடை மருத்துவக்கழகமும் இணைந்து “மருத்துவத்தில் ஊடுகதிரியக்கம் மற்றும் கதழ் ஒலி” குறித்த பயிற்சியை 28.03.2016 மற்றும் 29.03.2016ஆம் தேதிகளில் போர்ட் பிளேயரில் நடத்தின. இப்பயிற்சியின் துவக்க அமர்வின் சிறப்பு விருந்தினராகப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பங்கேற்று, துவக்க அமர்வினைத் துவக்கிவைத்துச் சிறப்புரை ஆற்றினார். மேலும், ஊடுகதிரியக்கம் மற்றும் கதழ் ஒலியின் அடிப்படைகள் குறித்த விரிவுரை அமர்விற்கும், “கால்நடை நலம் மற்றும் பராமரிப்பு தொடர்பான பல்வேறு துறைகளில் பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்படுத்த புதுமைகள்” குறித்த நிறைவு அமர்விற்கும் தலைமை வகித்தார். பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் ஆர். ஜெயபிரகாஷ், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் கே. ஜெயராஜா ஆகியோர் வல்லுநர்களாகப் பயிற்சில் பங்கேற்றனர். கால்நடைப் பராமரிப்புத் துறையின் கால்நடை மருத்துவர்கள், உள்ளூர் கால்நடை மருத்துவர்கள் மற்றும் இந்தியக் கோழியின ஆராய்ச்சி நிலையத்தின் அறிவியலாளர்கள் என 30 பேர் பயிற்சியில் பங்கேற்றனர்.

## சிறிய பிராணிகள் கதழ் ஒலி ஆய்வுப் பயிற்சி

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை சிகிச்சைத் துறையில் "சிறிய பிராணிகள் கதழ் ஒலி ஆய்வு" குறித்த இரண்டு பயிற்சிகள் 05.01.2016 முதல் 09.01.2016 வரை மற்றும் 29.02.2016 முதல் 04.03.2016 வரை நடத்தப்பட்டன. இதில் மலேசியா, மகாராஷ்டிரா, ஆந்திர பிரதேசம், கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழ்நாடு ஆகிய பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த 13 கால்நடை மருத்துவர்கள் பங்கு பெற்றனர். கல்லூரி முதல்வர் முனைவர் எல். குணசீலன் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார்.

## ஆய்வக விலங்கின அறிவியலில் சான்றிதழ்ப் படிப்பு




கால்நடை நலக்கல்வி மையத்தின் ஆய்வக விலங்கின மருத்துவப் பிரிவுமூலம் 'ஆய்வக விலங்கின அறிவியலில் சான்றிதழ்ப் படிப்பு' என்ற பயிற்சித் திட்டம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 22.02.2016 முதல் 03.03.2016 வரை நடைபெற்றது. இச்சான்றிதழ்ப் படிப்பானது தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், விலங்கினச் சோதனைகள் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வைக் குழு, ஆய்வக விலங்கின ஆராய்ச்சியாளர்கள் சபை மற்றும் விலங்குகள் நலனுக்கான தேசிய நிறுவனம் ஆகிய அமைப்புகளால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டது. கால்நடை நலக்கல்வி மைய இயக்குநர் மற்றும் பயிற்சித் திட்டத் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் முனைவர் பி.ஐ. கணேசன் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்தார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ச. பாலச்சந்திரன், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன் ஆகியோர் பங்கேற்றனர். 26 விஞ்ஞானிகள் பயிற்சியில் பங்கேற்றனர். 03.03.2016 அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவிற்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் தலைமை வகித்துத் தலைமையுரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார். மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் சி.பி.சி.எஸ்.இ.எ.–யின் உதவிச் செயலர் செல்வி பிரேமா மோகன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

## ஆளுமைத் திறன் வளர்த்தல் பயிற்சி

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இரண்டாம் ஆண்டு பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். (2014–15 சேர்க்கைப் பிரிவு) மாணவர்களுக்கு ஆளுமைத்திறன் வளர்த்தல் பயிற்சி, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 12.03.2016 மற்றும் 13.03.2016ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. கல்லூரி முதுல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்தார். பயிற்சியின் ஒருங்கிணைப்புச் செயலாளர் மற்றும்




பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப் குமார் அவர்கள் பயிற்சியின் தேவை குறித்து விளக்கினார். பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பயிற்சியில் பங்கேற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி, தமது உரையில் சவால்களை எதிர்கொள்ள ஆளுமைத்திறன் வளர்த்தல் பயிற்சியின் தேவை குறித்து வலியுறுத்தினார். மொத்தம் 58 மாணவர்கள் பயிற்சியில் பங்கேற்றுப் பயன்பெற்றனர். ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியிலும் ஆளுமைத்திறன் வளர்த்தல் பயிற்சி, 28.03.2016 மற்றும் 29.03.216ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் பி. முருகானந்தன் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்தார். பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர், விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப் குமார் ஆகியோர் உரையாற்றினர். மொத்தம் 68 மாணவர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## சிறப்பு விரிவுரை

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் நிகழ்வாய்வியல் துறைமூலம் "தொற்றுநோய் மாதிரியமைப்பு" குறித்த சிறப்பு விரிவுரைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அமெரிக்காவின் விர்ஜீனியா மேரிலாந்து கால்நடை மருத்துவக் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் முனைவர் காஜா எம். அப்பாஸ் அவர்கள் சிறப்பு விரிவுரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் மொத்தம் 115 இளநிலைப் பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

## கறவைமாடு வளர்ப்புப் பயிற்சி

✶ திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தூத்துக்குடி, ஸ்டேட் பாங்கு ஆப் இந்தியாவின் ஊரகத் தொழில்முனைவோர் பயிற்சி மையத்துடன் இணைந்து "கறவை மாடு வளர்ப்பு" குறித்த ஆறு பயிற்சிகளைத் தூத்துக்குடி மாவட்டத்தின் செய்துங்கநல்லூர் வட்டத்தில் 09.03.2016முதல் 16.03.2016வரை நடத்தியது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மாவட்டக் கிளைப் பிரிவுமூலம் தேர்வுசெய்யப்பட்ட 30 பயனாளிகள் பயிற்சியில் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

✶ கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் கரூர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகத் தொழில்முனைவோர் பயிற்சி மையத்தின் நிதியுதவியில் "இலாபகரமான கால்நடை வளர்ப்பு" குறித்த ஆறு பயிற்சிகள் 01.03.2016முதல் 08.03.2016வரை நடத்தப்பட்டன. 20 பண்ணை மகளிர் உட்படக் கரூர் மாவட்டத்தின் 32 விவசாயிகள் பயிற்சியில் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## செயற்கைமுறைக் கருவூட்டல் மையம் துவக்கம்

கறவை மாடுகளில் மலட்டுத்தன்மைப் பராமரிப்பில் தொழில்நுட்ப உதவி அளிக்கும்பொருட்டும், கறவை மாட்டுப்

பண்ணையாளர்களின் தேவைகளை நிறைவுசெய்யும் வகையிலும் திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இராமய்யன்பட்டி வளாகத்தில் செயற்கைமுறைக் கருவூட்டல் மையம் 18.03.2016அன்று துவக்கப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் எம். திருநாவுக்கரசு அவர்கள் மையத்தைத் துவக்கிவைத்தார். பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### பண்ணை உற்பத்திப் பொருள்கள் விற்பனை மையம் – துவக்க விழா



மாதவரம், பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணையில் கால்நடை மற்றும் பண்ணை உற்பத்திப் பொருட்களைப் பிரபலப்படுத்தும் வகையில் பல்கலைக்கழகப் பண்ணை உற்பத்திப் பொருட்கள் விற்பனை மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மையத்தைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 10.03.2016அன்று திறந்துவைத்து, முதல் விற்பனையைத் துவக்கிவைத்தார். மேலும், துணைவேந்தர் அவர்கள் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பண்ணையில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தையும் திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக அதிகாரிகள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.

### விருதுகள்

- இளநிலைப் பட்டப் படிப்பில் மதிப்பெண் ஒட்டுமொத்தத் தரப்புள்ளிச்சராசரியில்முதல்இருஇடங்களைப்பிடித்தநாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு இளநிலைப் பட்ட மாணவர்கள் செல்வி சி. லாவண்யா மற்றும் செல்வன் பவன்குமார் ஆகியோர்க்கு முறையே அலம்பிக் மருந்து தயாரிப்பு நிறுவனத்தின் Xceft மற்றும் M-ceft விருதுகள் அளிக்கப்பட்டடன.

- இளநிலைப் பட்ட இறுதியாண்டு மாணவி செல்வி பி.பி. நந்தினி மற்றும் மூன்றாமாண்டு மாணவர் செல்வன் எஸ். மகேஷ் குமார் ஆகியோர் நேச்சுரல் ரெமிடிஸ் மருந்து தயாரிப்பு நிறுவனம் நடத்திய “தாவரத்திலுள்ள வேதிப்பொருட்களும் மற்றும் கால்நடை மருத்துவத்தில் அதன் செயல்பாடுகள்” என்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசையும், இரண்டாம் பரிசையும் வென்றனர்.

### புதுமைப் பண்ணையாளர் விருது

சேலம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பண்ணையாளர் ஆலோசனைச் சேவையின் பயனாளி மற்றும் சேலம் மாவட்டத்தின் முன்னோடிப் பண்ணையாளர் திரு. எஸ் ஜெயராமன் அவர்களுக்கு 2016ஆம் ஆண்டிற்கான “ஆஏஆர்ஜ புதுமைப் பண்ணையாளர் விருது” 21.03.2016அன்று புதுதில்லியில் நடைபெற்ற தேசிய வேளாண் கண்காட்சி 2016 “க்ருஷி உன்னதியில்” அளிக்கப்பட்டது.

### உலக மரக்கன்று நடும் தினம்

உலக மரக்கன்று நடும் தினத்தை முன்னிட்டு, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் உழவியல் துறைமூலம் கல்லூரி வளாகத்தில் 21.03.2016அன்று மரக்கன்று நடும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அலங்கார மரக்கன்றுகள் நட்டனர்.

### உலக மகளிர் தினம்



உலக மகளிர் தினம், பல்கலைக்கழகத்தின் பல்வேறு உறுப்புக் கல்லூரிகளில் 08.03.2016அன்று கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று, பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் மற்றும் பதக்கங்கள் வழங்கி உரையாற்றினார். பல்வேறு பரிவுகளில் போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சியில் ஆசிரியர் மற்றும் நிர்வாக மகளிர் பணியாளர்கள் பங்கேற்றனர்.

### உலகக் காசநோய் தினம்



ராபர்ட் கோச் அவர்கள் முதன் முதலில் காசநோய்க்கான காரணத்தைக் கண்டறிந்த தினத்தை நினைவு கூறும் வகையில் “உலக காசநோய் தினம்” நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் 24.03.2016அன்று காரைக்குறிச்சி புதூரில் கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழகத்தின்

Posted on 29.04.2016 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 28.04.2016

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17
Registration No.TN/TBM/32/2015-17

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan, M.V.Sc., Ph.D., Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் ஆர். ஜெயப்பிரகஷ், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் இல. குணசீலன் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தனர். 100 குடும்பங்களிடம் காசநோய் பற்றிய தகவல்களை நேர்காணல் வினாப்படிவம் மூலம் சேகரிக்கப்பட்டது.

### உலகச் சிட்டுக்குருவி தினம்

நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்களால் சிட்டுக்குருவி நடைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 21.03.2016அன்று சிட்டுக்குருவி தினம் கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் கல்லூரி மற்றும் விடுதி வளாகங்களில் பொருத்துவதற்கு ஏதுவாக, சிட்டுக்குருவி கூடுகளை மாணவர்களுக்கு வழங்கினார். நமது சுற்றுச்சூழலில் சிட்டுக்குருவின் முக்கியத்துவம் குறித்த கலந்துரையாடல் அமர்வு, டிவிஎஸ் கிராமச் சேவை மையத்தின் சமூக சேவகர் திரு. நடனசபாபதிமூலம் நடத்தப்பட்டது.

### நாட்டுநலப் பணித் திட்டப் பணிகள்

- சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் குடற்புழு நீக்கம் மற்றும் கோமாரி



நோய் தடுப்பூசி முகாம், சென்னை பிஞ்சாரபோல் கோஷாலாவில் 05.03.2016அன்று நடத்தப்பட்டது. 22 நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்கள் முகாமில் பங்கேற்றனர். முதலாமாண்டு மாணவர்களுக்காக "தியானம் மற்றும் மன அமைதி"குறித்த ஒரு மணி நேர அமர்வு 01.01.2016முதல் 03.03.2016வரை நடத்தப்பட்டது.

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித்திட்டப் பிரிவு மூலம் புதுச்சத்திரம் ஒன்றியம், காரைக்குறிச்சி கிராமத்தில் சிறப்பு முகாம் 24.03.2016முதல் 30.03.2016வரை நடத்தப்பட்டது. முகாமில் காச நோய் விழிப்புணர்வு, நோய் கண்டறிதல் நிகழ்ச்சிகள், கால்நடை நல முகாம், பரிசோதனை, மதிப்புக் கூட்டிய இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருட்களின் செயல்முறை விளக்கம் ஆகியவை நடத்தப்பட்டன. கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் முகாமில் பங்கேற்று உரையாற்றினார்.

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம்




இரத்ததான முகாம் 15.03.2016அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். மொத்தம் 36 தன்னார்வலர்கள் இரத்ததானம் செய்தனர்.

### பணி ஓய்வு

சேலம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் 31.03.2016அன்று பணி ஓய்வுபெற்றார். 15.03.1956அன்று பிறந்த இவர், 35 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உடலியங்கியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கே. நஞ்சப்பன் அவர்கள் 31.03.2016அன்று பணி ஓய்வுபெற்றார். 04.03.1956அன்று பிறந்த இவர், 33 ஆண்டும் 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.

